වාර්ෂික වාර්තාව
ஆண்டறிக்கை
# ANNUAL REPORT 2019


Art by-Ishani Prarthana Hettiarachchi
Maharagama

ජාතික ළමා ආරක්ෂක අධිකාරිය
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
National Child Protection Authority

කාන්තා හා ළමා සංවර්ධන, පෙර පාසැල් හා ප්‍රාථමික අධ්‍යාපන, පාසැල් යටිතල පහසුකම් හා අධ්‍යාපන සේවා රාජ්‍ය අමාත්‍යාංශය.
மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள் கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு
**State Ministry of Women and Child Development, Pre – School & Primary Education, School Infrastructure & Education Services**

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**

# ஆண்டறிக்கை

# 2019

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

## *நோக்கு*

சிறுவர்களுக்கு சாதகமானதும், பாதுகாப்பானதுமான சூழலொன்றை கட்டியெழுப்புதல்.

## *செயற்பணி*

சிறுவர்கள் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் விடுதலை பெற்றிருப்பதை உறுதிசெய்தல்.

**2019 ஆம் ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை**

| | |
|---|---|
| சட்டத்தரணி திரு எச்.எம். அபயரத்ன<br><br>(2018 - 2019 ) | தவிசாளர்,<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை,<br>இல. 330, தலவத்துகொட வீதி,<br>மாதிவெல, ஸ்ரீ ஜயவர்த்தனபுர |
| சட்டத்தரணி திருமதி சுஜாதா குலதுங்க<br><br>(2018 - 2019) | பிரதி தவிசாளர்,<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை,<br>இல. 330, தலவத்துகொட வீதி,<br>மாதிவெல, ஸ்ரீ ஜயவர்த்தனபுர |
| பேராசிரியர் திருமதி அஷ்வினி டி பெர்ணாந்து (2018 - 2019) | சிரேஷ்ட சிறுவர் நோயியல் நிபுணர்,<br>ஆதார வைத்தியசாலை,<br>ராகம |
| டாக்டர் திருமதி அபேக்ஷா ஹேவாகீகன (2018 - 2019) | உளவியல் மருத்துவ நிபுணர்,<br>ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை,<br>பொரளை |
| டாக்டர் திரு யூ.ஏ.கே. தென்னக்கோன் (2018 - 2019) | பிரதம நீதிமன்ற மருத்துவ அலுவலர்,<br>நச்சுயியல் மற்றும் சட்ட மருத்துவ நிறுவகம்,<br>பொரளை,<br>கொழும்பு 08.. |
| சட்டத்தரணி செல்வி அயேஷா ஜினசேன (2018 - 2019) | சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல்,<br>சட்ட மாஅதிபர் திணைக்களம்,<br>கொழும்பு 12. |
| டாக்டர் திருமதி அயேஷா லொக்குபாலசூரிய<br><br>(2018 - 2019) | சமுதாய சுகாதார மருத்துவ நிபுணர்,<br>குடும்ப சுகாதார பணியகம்,<br>கொழும்பு 08. |

| | |
|---|---|
| திரு எம்.ஆர். லத்தீப்<br><br>(2017 - 2019) | சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர்,<br>விசேட அதிரடிப் படை தலைமையகம்,<br>பௌத்தாலோக மாவத்தை,<br>கொழும்பு 07 |
| திருமதி சந்திமா சிகேரா | ஆணையாளர்,<br>நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்,<br>II ஆம் கட்டம், செத்சிறிபாய,<br>பத்தரமுல்லை |
| திரு ஏ. விமலவீர<br><br>(2017 - 2020) | தொழில் ஆணையாளர் நாயகம்,<br>தொழில் திணைக்களம்,<br>நாராஹேன்பிட்டி,<br>கொழும்பு 05 |
| திருமதி சுஜீவா பல்லியகுருகே<br>(2018 முதல் இன்று வரை) | பணிப்பாளர் - அபிவிருத்தி,<br>சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு,<br>II ஆம் கட்டம், செத்சிறிபாய,<br>பத்தரமுல்லை |
| திரு ஆர்.எம்.ஏ. ரத்நாயக்க<br>(2016 - 2019) | மேலதிகப் பணிப்பாளர் நாயகம்,<br>திறைசேரி நடவடிக்கை திணைக்களம்,<br>நிதி அமைச்சு,<br>கொழும்பு 01 |
| திரு ஏ.எஸ்.பி. பக்மீவெவ<br><br>(2018 - 2019) | சிரேஷ்ட பயிற்சி ஆலோசகர்,<br>உறுப்பினர்,<br>இல. 138,<br>பின்வலபிட்டிய வத்த,<br>குருநாகல் |
| திரு ஏ.ஆர்.பீ.சீ. உதயகுமார அமரசிங்க<br><br>(2018 ) | குற்றவியல் சிரேஷ்ட விரிவுரையாளர்<br>ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் |
| செல்வி என்.ஆர். அனீஸ்<br><br>(2019 - 2020) | பணிப்பாளர் நாயகம்,<br>அபிவிருத்தி நிதித் திணைக்களம்,<br>நிதி அமைச்சு,<br>கொழும்பு 01 |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான சபை உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திருமதி கே.எச். ரோஷினி<br>(2017 - 2019) | சிரேஷ்ட உதவிச் செயலாளர்<br>நீதி அமைச்சு,<br>உச்ச நீதிமன்றக் கட்டிடத்தொகுதி,<br>நீதிமன்ற மாவத்தை,<br>கொழும்பு 12 |
| கலாநிதி திருமதி மதுரா எம். வேஹெல்ல (2017 - 2019) | மேலதிக செயலாளர்,<br>கல்வி அமைச்சு,<br>இசுறுபாய,<br>பத்தரமுல்ல |
| திரு டபிள்யு.ஏ. குலசூரிய<br>(2017 - 2019) | மேலதிக செயலாளர்,<br>பாதுகாப்பு அமைச்சு,<br>சாரணர் மாவத்தை,<br>கொழும்பு 03 |
| திருமதி பீ.ஜே.டி. பெர்ணாந்து<br>(2016 - 2020) | சிரேஷ்ட உதவிச் செயலாளர்,<br>சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு,<br>செத்சிறிபாய,<br>பத்தரமுல்லை. |
| திரு ஏ.எச்.எல்.டி. சொய்சா<br>(2017 - 2019) | சிரேஷ்ட உதவிச் செயலாளர்,<br>உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு,<br>இல. 330, யூனியன் பிளேஸ்,<br>கொழும்பு 02 |
| திருமதி ஆர்.எல்.எஸ்.பீ. சுவர்ணலதா<br>(2018 - 2019) | மேலதிகச் செயலாளர்,<br>மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு<br>கட்டம் II, செத்சிறிபாய,<br>பத்தரமுல்லை. |

| | |
|---|---|
| திரு சீ.எச். கமகே<br>(2019 - 2020) | சிரேஷ்ட உதவிச் செயலாளர்,<br>சுற்றுலா அமைச்சு,<br>யோர்க் வீதி,<br>கொழும்பு 01. |

| உள்ளடக்கம் | பக்க இல. |
|---|---|
| அறிமுகம் | 1-2 |
| பிரதான செயற்பணி | 3-5 |
| அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு | 5 |
| 2019 ஆம் ஆண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு | 6 |
| 2019 ஆம் ஆண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் வெற்றிடங்கள் | 7-10 |
| | |
| சிறுவர் பாதுகாப்புக்கான தேசியக் கொள்கை | 10 |
| இலங்கையில் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான வழிகாட்டி மற்றும் தரநியமத் தொகுப்பு | 10 - 11 |
| பாடசாலை பாடவிதானத்திற்கு வாழ்க்கைத்திறனை அறிமுகம் செய்தல் மற்றும் பாலியல் கல்வி தொடர்பிலான விடயங்களை உள்ளடக்குதல் | 11 |
| திடீர் அனர்த்த நிலைமைகளின் போது பின்பற்றப்பட வேண்டிய சிறுவர் பாதுகாப்புக்கான வழிகாட்டல் கையேடு | 12 |
| சாதாரண சிறுவர் அரவணைப்புப் பாடநெறிக்கான பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டி | 13 |
| பகல்நேர பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டல் தொகுப்பு தொடர்பில் அலுவலர்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்றுவித்தல். | 13-14 |
| கல்விச் சுற்றறிக்கை **17/2011** இனை இற்றைப்படுத்தல் | 14 |
| பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் நிகழ்ச்சித்திட்டம் | 14-15 |
| ஜனபவுர சமுதாய அடிப்படையிலான சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் | 15-16 |
| பெருந்தோட்டத்துறை சம்பந்தப்பட்ட சிறுவர்கள் மற்றும் சமுதாயத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் | 16 |
| இலங்கையில் கரையோர வலயங்களை மையமாகக் கொண்ட சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் (சியபத் சுரகும்) | 17 |
| சிறுவயதில் கர்ப்பமடைவதைத் தடுப்பதற்காக மாவட்ட மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல். | 17 |
| சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு பற்றி பாடசாலை ஆரம்ப ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல் | 18 |
| பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கான சாதகமான ஒழுக்கம் பற்றிய கையேடு | 18 |
| சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் தேசியக் கல்விக் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் மற்றும் கல்விப் பதவியணி உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம். | 19 |

| | |
|---|---|
| அதிபர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 19 |
| சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பொலிஸ் பயிற்சிக் கல்லூரி அலுவலர்களை விழிப்புணர்வூட்டல் | 20 |
| சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் சுகாதார தொழில்வல்லுனர்கள் மற்றும் தொண்டர் அடிப்படையிலான சுகாதார ஊழியர்களின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களை வளர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் | 20 |
| சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் மருத்துவ பட்டப் பின் படிப்பு நிறுவகத்தில் கல்வி பயிலும் மருத்துவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 21 |
| சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் (சிறுவர் இல்லங்களின்) நிருவாக சபை மற்றும் பதவியணியை பயிற்றுவித்தல் | 21 |
| தடுத்துவைக்கப்பட்டுள்ள இல்லங்கள் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகளிலுள்ள சிறுவர்கள் மற்றும் பதவியணியினருக்கான உளவியல், சமூக பயிற்சி | 21 - 22 |
| பாடசாலை ஆலோசனை ஆசிரியர்களுக்கான உளவியல் சமூக பயிற்சி | 22 |
| இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள் | 22 - 23 |
| அச்சிடப்பட்ட அம்சங்களை வடிவமைத்தல் | 23 - 24 |
| சிறுவர் பாதுகாப்பு விடயம் தொடர்பில் பாடசாலை ஊடக சமூக நிகழ்ச்சித்திட்டம் | 24 |
| சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினம் | 24 |
| உலக சிறுவர் தினம் | 24 |
| சர்வதேச சிறுமியர் தினம் | 25 |
| கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகள் | 25 |
| சுனாமி கெப்பகரு பெற்றோர் பாதுகாவலர் மதிப்பீட்டுச் சபை | 25 |
| உளவியல் ஆரோக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்கான உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் | 26 |
| பாதிக்கப்பட்ட, ஓரங்கப்பட்டப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற சிறுவர்களுக்கு உளவியல் சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் (திறிய நிகழ்ச்சித்திட்டம்) | 26 |
| சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்கும் சமய மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களை (சிறுவர் அபிவிருத்தி நிலையம்) ஒழுங்குறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 26 - 27 |
| மாதாந்த மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தல் | 27 |
| மாவட்ட அலுவலர்களுக்கான காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தல். | 28 |
| திட்டமிடல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் செயலமர்வுகள் | 28 |
| வீதிச் சிறுவர்கள் மற்றும் யாசகர்கள் பற்றிய கற்கை | 29 |

| | |
|---|---|
| மாவட்ட ரீதியிலான சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் கூட்டம் | 29 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை அபிவிருத்தி செய்தல் | 29 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நூலகத்தை அபிவிருத்தி செய்தல் | 29 |
| வெகுசன ஊடக ஒருங்கிணைப்பு | 30 |
| சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் வாக்குமூலங்களை வீடியோ ஒளிப்பதிவு செய்தல் | 30 - 31 |
| 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை | 31 |
| சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகள் | 31 - 32 |
| சட்டப் பணிகள் | 35 |
| விசேட பொலிஸ் விசாரணைகள் | 35 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்களுக்காக 2019 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகள் | 36 - 37 |
| 2019.12.31 ஆம் திகதிக்கான வருமானக் கூற்று | 38 |
| 2019.12.31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக் கூற்று | 39 |
| 2019.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று | 40-42 |
| 2019.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றம் பற்றிய கூற்று | 43 |
| கணக்காய்வு அறிக்கை | 44-49 |

# அறிமுகம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணிகளில் முக்கியமானதாக இருப்பது சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான தேசிய கொள்கையைத் தயார் செய்வதாகும். இந்த ஆண்டினுள் சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான கொள்கையைத் தயார் செய்வதற்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

1989 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி 'ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்' உலகப் பிரகடனமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. இந்த சமவாயம் 54 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், அதன் மூலம் உலகின் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தாக வேண்டிய உரிமைகள் மற்றும் மேற்படி உரிமைகளை அமுல்படுத்துவதில் அரசுக்கு உரித்தான பொறுப்பும் விபரிக்கப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகள் தொடர்பாக அப்போது காணப்பட்ட சமூக நிலைமையை ஆராயும் போது, சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரத் தொழில், சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்துவது தொடர்பில் நோக்காகக் கொள்ளப்பட்டது. இதன் போது சர்வதேச ரீதியில் காணப்பட்ட இரகசிய வியாபாரம் அதிகரிப்பது பற்றித் தீவிர கவனம் செலுத்தி, ஆயுதப் போராட்டங்களில் சிறுவர்கள் பலாத்காரமாக யுத்த சேவையில் ஈடுபடுத்தப்படல் அல்லது ஆட்சேர்ப்புச் செய்வதை சர்வதேச குற்றமொன்றாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு, சிறுவர்களை ஆயுதப் போராட்டங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதைத் தடுத்தல் மற்றும் சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரம் மற்றும் சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்துவதை தடுத்தல் ஆகிய உபவரைவுகள் உள்ளடக்கப்பட்டன.

உலகில் காணப்பட்ட இந்தப் போக்குடன் இலங்கை அரசும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் சமவாயத்தில் 1990 ஆம் ஆண்டு கையொப்பமிட்டு தமது இணக்கப்பாட்டை தெரிவித்தது. 1991 யூலை மாதம் 12 ஆம் திகதி இது நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய, இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வது தொடர்பாக 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறுவர் பாதுகாப்பு பற்றிய சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டது. இதன் போது விடயங்களை ஆராய்ந்த மேற்படி குழு சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றின் தேவை தொடர்பிலான சிபாரிசுகள் சமர்ப்பித்தது. அதற்கமைய 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நீதி அமைச்சரினால் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இச்சட்டம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தாபிக்கப்பட்டது. 1990 யூன் மாதம் அதிகாரசபையின் தலைவர் மற்றும் நிருவாக சபை நியமனம் செய்யப்பட்டதை அடுத்து அதிகாரசபை இயங்க ஆரம்பித்தது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஆரம்பம் முதல் இன்று வரை சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களின் போது அது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீள்சமூகமயப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தி நாட்டிலுள்ள சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், 2004 டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அபிவிருத்திக்காக 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலமும் அதிகார சபைக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது. மேலும் 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளைத் தடுக்கும் சட்டத்தின் மூலமும் ஒரு பிள்ளை குடும்ப வன்முறைக்கு ஆளாகும் பட்சத்தில் அதிகார சபைக்கு அறியக் கிடைக்கும் போது மூன்றாம் தரப்பினராக அதில் தலையிட முடியும்.

சிறுவர்களின் உச்சளவான நலனுக்காக செயற்படுவதற்கு சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை துரிதமாக மற்றும் முறையாக அறிக்கையிடுவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2010 யூலை 22 ஆம் திகதி "1929" இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையானது 24 மணிநேரமும் இயங்கும் வகையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வளவில் தாபிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சமூகத்தில் மறைந்திருந்த சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதை அவதானிக்க முடிந்தது. இன்று இலங்கையின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதுடன், ஆலோசனைச் சேவைகளையும் இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சிறுவர்களின் பாதுகாப்புக்காக இந்த ஆண்டிலும் தேசிய செயற்றிட்டங்களுக்கு அமைய தமது பணிகளை மேற்கொண்டுள்ளது.

## பிரதான செயற்பணி

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பரந்தளவிலான செயற்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்ற சிறுவர்களை பாதுகாப்பதும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பான தேசிய கொள்கையொன்றை தயார்செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கல்.

- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

- அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளானவர்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

- துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உள்ள உரிமைகள் தொடர்பாகவும், சிறுவர் நெறிபிறழ்வைத் தடுப்பதற்கான முறைமை பற்றியும் அறிவுறுத்தல்.

- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கின்ற பணிக்கும், அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், தேவையான சகல வகையிலுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பொருத்தமான சந்தர்ப்பங்களில் அந்தப் பணிகளுக்கு உரிய அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்ட, பிரதேச செயலாளர்களினதும் அரசாங்க, தனியார் துறையினரினதும், அமைப்புகளின் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளல்.

- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான தேசிய கொள்கையை பயன்மிக்கவாறு அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ரீதியான நிருவாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல்.

- சகல வகையிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துவதை ஒழுங்குபடுத்தல்.

- சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றங்களை ஒழுங்குறுத்தல்.

- ஆயுத மோதல்களின் அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பாக மனிதாபிமான அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வதும், அவர்களின் உடல்

மற்றும் உளவியல் நலன்புரிக்கு நடவடிக்கை எடுப்பதும் உட்பட அவ்வாறான சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களை சமூகத்தில் மீள இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை விதந்துரைத்தல்

- குற்றங்கள் தொடர்பான புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள சிறுவர்களின் பாதுகாப்புக்கும் அரவணைப்புக்கும் தேவையான சந்தர்ப்பங்களில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றுக் கொள்வதும் தேவையான சந்தர்ப்பங்களில் அந்த முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதும்.

- சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக மேற்கொள்கின்ற கடுமையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வது தொடர்பாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச சார்பற்ற அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குவதும் உதவி வழங்குவதும்.

- சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தேசிய தரவுக் கட்டமைப்பை தயார் செய்வதும், அதனை பேணிவருவதும்.

- சம்பந்தப்பட்ட அமைச்சுகள், வேறு நிறுவனங்களின் அலோசனைகளைப் பெற்று சிறுவர்களுக்கு சிறுவர் பாதுகாப்புச் சேவைகளை ஆற்றுகின்ற சகல சமய மற்றும் மத சார்பான நிறுவனங்களை கண்காணிப்புச் செய்வதும் அது தொடர்பான ஒழுங்குறுத்தல்களும்.

- சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்துவதும் மேம்படுத்துவதும் ஒருங்கிணைப்புச் செய்வதும்.

- சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக மக்களுக்கு தகவல்களை பெற்றுக்கொடுப்பதும் கல்வியை பெற்றுக்கொடுப்பதும்.

- சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புக்களை குறைப்பதற்காக சுற்றுலாத்துறை நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து பிரிவுகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.

- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செயலமர்வுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்வதும் அதற்கான வசதிகளை செய்துகொடுப்பதும்.

- சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்திக் கொள்வதும், தடுப்பதும் அது தொடர்பாக வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச


அமைப்புகளுடன் ஒருங்கிணைப்புகளைப் பேணி நடவடிக்கை மேற்கொள்வதும் தகவல்களை பரிமாற்றிக்கொள்வதும்.

## அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையகத்தில் பின்வரும் அலகுகள் இயங்கி வருகின்றன.

- நிருவாகம் மற்றும் மனித வளப் பிரிவு
- நிதிப் பிரிவு
- திட்டமிடல் மற்றும் தகவல் பிரிவு
    - திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் பிரிவு
    - தகவல் மற்றும் ஊடகப் பிரிவு
        - நூலகம்
- நிகழ்ச்சித்திட்ட பிரிவு
- உளவியல் சமூக பிரிவு
- சட்டப் பிரிவு
    - வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் அலகு
- சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவு
    - 1929 இலங்கை சிறுவர் தொலைபேசிச் சேவை
    - விசாரணை அலகு
    - மத்திய ஆவணக்காப்பகம்
    - விசாரணை மற்றும் சைபர் கண்காணிப்பு அலகு
- உள்ளகக் கணக்காய்வு பிரிவு
- விசேட பொலிஸ் விசாரணை பிரிவு

## 2019 ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நிறுவன ஒழுங்கமைப்பு



## 2019 ஆம் ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி

| இல. | பதவி | சம்பளக் குறியீடு | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | HM -2-1 | 01 | 01 | - |
| 02 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | HM -1-3 | 01 | - | 01 |
| 03 | பணிப்பாளர் - நிருவாகம் மற்றும் மனித வளம் | HM -1-1 | 01 | 01 | - |
| 04 | பணிப்பாளர் - நிதி | HM -1-1 | 01 | - | 01 |
| 05 | பணிப்பாளர் - சட்டம் | HM -1-1 | 01 | - | 01 |
| 06 | உளவியல் சிகிச்சை நிபுணர் | HM -1-1 | 01 | - | 01 |
| 07 | பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | HM -1-1 | 01 | 01 | - |
| 08 | பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் | HM -1-1 | 01 | 01 | - |
| 09 | பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | HM -1-1 | 01 | - | 01 |
| 10 | உதவி பணிப்பாளர் - நிருவாகம் | MM -1-1 | 01 | 01 | - |
| 11 | உதவி பணிப்பாளர் - சட்டம் | MM -1-1 | 01 | 01 | - |
| 12 | உதவி பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் | MM -1-1 | 01 | 01 | - |
| 13 | உதவி பணிப்பாளர் - உளவியல் | MM -1-1 | 01 | 01 | - |
| 14 | உதவி பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | MM -1-1 | 01 | 01 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | உதவி பணிப்பாளர் - தகவல் மற்றும் ஊடகம் | MM -1-1 | 01 | - | 01 |
| 16 | உதவி பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | MM -1-1 | 01 | - | 01 |
| 17 | கணக்காளர் | MM -1-1 | 01 | 01 | - |
| 18 | உள்ளக கணக்காய்வாளர் | MM -1-1 | 01 | 01 | - |
| 19 | பணிப்பாளர் சபை செயலாளர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 20 | நிருவாக அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 21 | நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 22 | கணக்கு அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 23 | புலனாய்வு அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 24 | தகவல் மற்றும் ஊடக அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 25 | திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 26 | ஆராய்ச்சி மற்றும் நலன்புரி அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 27 | மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்) | MA - 4 | 01 | - | 01 |
| 28 | மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) | MA - 4 | 01 | - | 01 |
| 29 | மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 25 | 18 | 07 |
| 30 | மாவட்ட உளவியல் சமூக அலுவலர் | MA - 3 | 25 | 14 | 11 |
| 31 | பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 360 | 248 | 112 |
| 32 | நிருவாக உதவியாளர் | MA - 3 | 01 | 01 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 33 | கணக்குகள் உதவியாளர் | MA - 3 | 03 | 02 | 01 |
| 34 | ஊடக உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 35 | நூலகர் | MA - 3 | 01 | - | 01 |
| 36 | திட்டமிடல் உதவியாளர் | MA - 3 | 01 | 01 | - |
| 37 | சட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 38 | புலனாய்வு உதவியாளர் | MA - 3 | 02 | - | 02 |
| 39 | ஆலோசனை உதவியாளர் | MA - 3 | 04 | 03 | 01 |
| 40 | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 41 | வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் உதவியாளர் | MA - 3 | 01 | 01 | - |
| 42 | இணையத்தள பரிசோதனை உதவியாளர் | MA - 3 | 01 | - | 01 |
| 43 | சிகிச்சையளிக்கும் மருத்துவர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 44 | வீடியோ தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 01 | 01 | - |
| 45 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) | MA – 2-1 | 15 | 09 | 06 |
| 46 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 02 | 02 | - |
| 47 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) | MA – 1-1 | 32 | 28 | 04 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 48 | சாரதி | PL-3 | 07 | 06 | 01 |
| 49 | செய்தி கொண்டுசெல்பவர் (தூதுவர்) | PL-1 | 01 | - | 01 |
| 50 | அலுவலக சிற்றூழியர் | PL-1 | 03 | 02 | 01 |
| 51 | அலுவலக தொழிலாளி | PL-1 | 02 | 01 | 01 |
| **மொத்தம்** | | | **527** | **359** | **168** |

## அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2019

### சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையை தயார் செய்வதானது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதான செயற்பணியாகும். அதற்கு 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் (அ) பிரிவினால் தத்துவமளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தேசிய சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையைத் தயார் செய்வது தொடர்பில் 2009 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை மேற்கொண்டு வந்துள்ளது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இந்தக் கொள்கை வரைவு செய்யப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை மற்றும் ஆளுகை சபையின் இறுதி இணக்கப்பாடு மற்றும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 2019.10.29 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. இந்தக் கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பில் திட்டமிடல் திணைக்களத்துடன் 2 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன.


### இலங்கையின் சிறுவர் அரவணைப்பு நிலையங்களுக்கான வழிகாட்டல் தொகுப்பு மற்றும் தரநியமங்களின் தொகுப்பு

இலங்கையில் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் வாழும் சிறுவர்களின் உச்ச நலனுக்காக நடவடிக்கை மேற்கொள்வது மிகவும் முக்கியமான அம்சமாகும். அதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் இலங்கையின் சிறுவர் அரவணைப்பு நிலையங்களுக்கான வழிகாட்டல் தொகுப்பு மற்றும் தரநியமங்களின் தொகுப்பு தயார் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கமாக இருப்பது, தேசிய மட்டத்தில் ஒவ்வொரு சிறுவர் அபிவிருத்தி நிலையமும் தரமான மற்றும் தரப்படுத்தப்பட்ட செயன்முறையைக் கொண்டுள்ளதை உறுதி செய்தல், பாதுகாப்பு மற்றும் சிறுவர் நட்புறவான சிறுவர் அபிவிருத்திச் சேவையை

மேம்படுத்துவதுமாகும். இலங்கையில் இயங்கிவருகின்ற சகல சிறுவர் அபிவிருத்தி நிலையங்களையும் கண்காணிப்புச் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்தல் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் சேவையாற்றுகின்ற பதவியணியினரின் சேவைசார் தரம் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகும். 2019 ஆம் ஆண்டில் வழிகாட்டல் தொகுப்பு மற்றும் ஆகக் குறைந்த தரநியமங்களின் தொகுப்பின் இறுதி வரைவுக்கு நேர்வரிசை அமைச்சின் குழுவொன்றின் ஊடாக சிபாரிசுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.








## பாடசாலை பாடவிதானத்திற்கு வாழ்க்கைத் திறன் அபிவிருத்தி மற்றும் பாலியல் கல்விக்கான விடயங்களை உட்புகுத்தல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையானது, ஆரம்பப் பிரிவின் பாடவிதானத்தில் வாழ்க்கைத் திறன் அபிவிருத்தி மற்றும் பாலியல் கல்வி தொடர்பிலான விடயங்களை உட்புகுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்காக கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவகம் ஆகியன உதவி வழங்கியுள்ளன. இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கமாக இருப்பது தமது உடலை இனங்காணல், பாதுகாத்துக் கொள்ளல் மற்றும் ஆளுமை அபிவிருத்தி தொடர்பிலான விடயங்கள் சம்பந்தமாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுலவர்களுக்கு மத்தியில் பரந்ததொரு புரிந்துணர்வை ஏற்படுத்தல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் உரிமைகளை உறுதி செய்யும் பாதுகாப்பான சிறுவர் நட்புறவுப் பாடசாலைச் சூழலை ஏற்படுத்துவதாகும். இதன் கீழ் ஆரம்பப் பிரிவின் ஆசிரிய ஆலோசகர்களுக்கு ஆசிரியர் பயிற்சி நடவடிக்கைகளின் போது பயன்படுத்துவதற்காக கற்றல், கற்பித்தல் உதவி அம்சங்களாக உருவாக்கப்பட்டுள்ள 03 வீடியோத் தொகுப்புக்களின் பிரதிகள் 2019 ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்டுள்ளன.


## திடீர் அனர்த்த நிலைமைகளின் போது பின்பற்ற வேண்டிய சிறுவர் பாதுகாப்புக்கான வழிகாட்டல்களை உள்ளடக்கிய கையேட்டைத் தயார் செய்தல் (சிறுவர்களுக்கான உளவியல் மற்றும் சமூக முதலுதவி)

இலங்கையில் ஏற்படுகின்ற வெள்ளம், சூறாவளி, மண்சரிவு, பூமி அதிர்ச்சி மற்றும் சுனாமி போன்ற அனர்த்தங்கள் காரணமாக, சிறுவர்கள் கடும் அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர். இதன் போது சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் தீவிர கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும். இது தொடர்பில்  கவனம் செலுத்திய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சிறுவர்களின் உளவியல் முதலுதவி எனும் கையேட்டைத் தயார் செய்துள்ளது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கமாக இருப்பது அனர்த்தமொன்றுக்கு ஆளாகும் பிள்ளைகளின் உளவியல் சுகாதாரம் மற்றும் உளவியல் சமூக நல்ல நிலைத்தலைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல், அனர்த்தத்திற்கு ஆளான பிள்ளைகள் மத்தியில் நிலவும் உளவியல் சிக்கல் நிலைமைகளுக்குத் தேவையான சிகிச்சை நிலைமைகளை இனங்காணல், உளவியல் சமூக ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல், சிறுவர்களின் உளவியல் சுகாதாரம் மற்றும் உளவியல் முதலுதவி தொடர்பிலான தொழில்வல்லுனர்களுக்கு மத்தியில் காணப்படுகின்ற அறிவு, மனப்பாங்கு மற்றும் திறமைகளை வளர்த்தல், சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துர்நடத்தைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவது பற்றிய அடிப்படை அறிவை சிறுவர்கள் மற்றும் சமுதாயத்தினருக்குப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் அல்லது தொண்டர் அமைப்புக்களுக்கு முறையான வழிகாட்டலைப் பெற்றுக் கொடுத்தல். 2019 ஆம் ஆண்டில் இக்கையேடு அச்சிடப்பட்டது.











## சாதாரண சிறுவர் அரவணைப்புப் பாடநெறிக்கான பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டி

சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் தொடர்பிலான தேசிய வழிகாட்டலுக்கு இசைவாக சிறுவர் அரவணைப்பு சான்றிதழ் பாடநெறி (NVQ 4) தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய தொழில் பயிற்சி அதிகார சபை (VTA) 5 மாவட்டங்களில் (கொழும்பு, களுத்துறை, கண்டி,

காலி மற்றும் கிளிநொச்சி) இதனை மேற்கொள்கின்றது. தேசிய பயிலுனர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார (NAITA) சபையானது 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த பாடநெறியை ஆரம்பித்து நடாத்திச் செல்கின்றது. இந்தப் பாடநெறி 12 பயிற்சி வழிகாட்டல்களைக் கொண்டுள்ளதுடன், அதற்கான பயிற்சிக் கையேடு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் தயார் செய்யப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் இதன் 500 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன.







## பகல்நேர பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டல் தொகுப்பு தொடர்பில் அலுவலர்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்றுவித்தல்.

கொள்கை திட்டமிடல் அமைச்சு, பிரதம அமைச்சர் அலுவலகம், சிறுவர் செயலகம் மற்றும் நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையானது பகல்நேர பராமரிப்பு நிலையங்களுக்கான வழிகாட்டல் தொகுப்பைத் தயார் செய்துள்ளது. இதன் முக்கிய நோக்கமாக இருப்பது தேசிய மட்டத்தில் ஒவ்வொரு சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையத்தினதும் தரமானதன்மை மற்றும் தரப்படுத்தப்பட்ட செயன்முறையை





உறுதி செய்தல் மற்றும் தொழில்சார் மற்றும் பாதுகாப்பான சிறுவர் பகல்நேர பராமரிப்புச் சேவையை மேம்படுத்துவதாகும். 2017 ஆம் ஆண்டில் இதற்குப் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் இதன் சிங்கள மொழி மூலமான 3500 பிரதிகளும், தமிழ் மொழி மூலமான 1000 பிரதிகளும், ஆங்கில மொழி மூலமான 500 பிரதிகளுமாக 5000 சீடி பிரதிகள் அச்சிடப்பட்டன. 07 மாவட்டங்களில் ஒரு நாள் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 07 நடாத்தப்பட்டதுடன், அதன் மூலம் அரச அலுலவர்கள் 415 பேர் விழிப்புணர்வூட்டப்பட்டார்கள்.



## கல்விச் சுற்றறிக்கை 2011/17 இனை இற்றைப்படுத்தல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை தாபிப்பதற்காக 2011 இன் 17 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. இதற்கமைய, நாடளாவிய ரீதியில் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களைத் தாபிப்பதற்கான ஒழுங்குவிதிகளை ஏற்படுத்துவதற்காக இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. இந்த சுற்றறிக்கையை மென்மேலும் முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள நோக்கமாக இருப்பது, பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களைத் தாபிப்பதற்கும், அமுல்படுத்துவதற்கும் தேவையான சட்டரீதியான பின்னணியை கட்டியெழுப்புவதாகும். 2019 ஆம் ஆண்டில் இந்த சுற்றறிக்கையை இற்றைப்படுத்துவதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட அலுவலர்கள் மற்றும் பிரதேச அலுவலர்களின் கருத்துக்களும் பெற்றுக் கொள்ளப்பட்டன. இதன் போது இந்த சுற்றறிக்கையை இற்றைப்படுத்தாது பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களுக்கான கையேட்டுக்கு புதிய போக்குகளை உட்புகுத்தித் தயார் செய்துகொள்ள பிரேரிக்கப்பட்டது.

## பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் நிகழ்ச்சித்திட்டம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான நிகழ்ச்சித்திட்டமொன்றாக பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் தாபிக்கப்பட்டதை அறிமுகம் செய்ய முடியும். இதன் உத்தேச நோக்கமாக இருப்பது, பாடசாலைக்கு வருகைதரும் ஒவ்வொரு பிள்ளையையும் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாக்கும் சூழலை பாடசாலை சூழலில் மற்றும் போசிப்புப் பிரதேசத்தில் கட்டியெப்புதல், பாடசாலையை சிறுவர்களுக்கு சாதகமான சூழலாக மாற்றுதல், சிறுவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கு இடையிலான தொடர்பை மேம்படுத்தல், சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாக பாதிக்கப்பட்ட, அநாதரவான மற்றும் ஓரங்கட்டப்பட்டுள்ள சிறுவர்களை இனங்காணல் மற்றும் இலகுபடுத்தல்களை செய்தல், சிறுவர் பங்கேட்பை மேம்படுத்துவதாகும். 2019 ஆம் ஆண்டில் இக்கையேட்டுக்கான வரைவு தயார் செய்யப்பட்டதுடன், இதன் உள்ளடக்கம் நூலாசிரியர் குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டில் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக்

குழுக்களைத் தாபித்தல் மற்றும் வலுவூட்டுவதன் கீழ் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் 646 தாபிக்கப்பட்டன. விசேட பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் 106 நடாத்தப்பட்டன.





**ஜனபவுர சமுதாய அடிப்படையிலான சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்**

இந்த நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்படுவது கிராமிய, பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களிலாகும். இதன் மூலம் சிறுவர் பாதுகாப்புக்காக நடவடிக்கை மேற்கொள்வதற்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய தொண்டர் மக்கள் பிரதிநிதிகள் குழுவொன்றை ஏற்படுத்துவது மேற்கொள்ளப்படுகின்றது. இதன் நோக்கமாக இருப்பது இலங்கையில் சிறுவர்கள் பற்றிய சகல தகவல்களையும் உள்ளடக்கிய தேசிய தரவு முறைமையை கட்டியெழுப்புதல், கிராமிய மட்டத்தில் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான பொறிமுறையை கட்டியெழுப்புதல், வெளிநாடு சென்றுள்ள பெற்றோரின் சிறுவர்களைப் பாதுகாத்தல் மற்றும் ஒவ்வொரு பிள்ளை தொடர்பிலுமான சம்பவக் கற்கைகளை மேற்கொண்டு சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமை தொடர்பிலான காரணிகளை கண்டறிவதன் மூலம் பிள்ளையின் விசேட அம்சங்களை கவனத்தில் கொண்டு பிள்ளைகளின் எதிர்கால பாதுகாப்புக்காக தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல், பிள்ளைகளை பாடசாலைமயப்படுத்தல் மற்றும் பாடசாலைமயப்படுத்த முடியாத பிள்ளைகளுக்கு தொழில் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல் ஆகும். இந்த சிறுவர்களின் தன்மை மற்றும் சட்டபூர்வமான பாதுகாவலர்களை அறிவுறுத்தல், பாடசாலைமயப்படுத்தப்பட்ட மற்றும் தொழில் பயிற்சியளிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பில் பின்னாய்வுச் செயன்முறைக்கான நடைமுறைக்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தல், சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை கிராமிய மட்டத்தில் விளைதிறன்மிக்கவாறு அமுல்படுத்தல் மற்றும் தேசிய மட்டத்தில் அவ்வவ் பிரதேசங்களில் சிறுவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தலுக்காக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், சட்டங்களைத் திருத்தம் செய்தல் மற்றும் கொள்கைகள் போன்றன தொடர்பில் அரசாங்கத்திற்கு விளக்கங்களைச் சமர்ப்பிப்பதற்காக கிராமிய மட்டம் முதல் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் பொறிமுறையைத் தயார் செய்தல்.

2019.07.01 ஆம் திகதி அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள 22 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் 694 கிராம அலுவலர் பிரிவுகளிலும் ஜனபவுர உறுப்பினர்கள் 4177 பேரின் பங்கேட்புடன் மிகவும் வெற்றிகரமாக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இந்த

நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு 555 பாடசாலைகளில் சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு தொடர்பிலான சுவர் ஓவியங்களை வரைதல் குறிப்பாக சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி கல்வி பெறுவதன் முக்கியத்துவம், சிறுவர்களுக்கு இடம்பெறுகின்ற உளவியல் மற்றும் உடல்சார் துன்புறுத்தல்களை குறைத்தல் தொடர்பில் வடிவமைக்கப்பட்ட வாக்கியங்களை ஒவ்வொரு பாடசாலை சுவர்களிலும் அல்லது தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் சுவர்களில் வரைவதற்கான ஏற்பாடுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.






## பெருந்தோட்டத்துறை சம்பந்தப்பட்ட சிறுவர்கள் மற்றும் சமுதாயத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் தோட்டத்துறையை மையமாகக் கொண்டு வாழும் சிறுவர்கள் மற்றும் சமுதாயத்தினரின் சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான அறிவை வளர்ப்பதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் மூலமான உத்தேச நோக்கமாக இருப்பது தோட்டத்துறையில் வாழும் குடும்பங்களை சிறுவர் பாதுகாப்புக் குடும்பங்களாக மாற்றி அவற்றில் வாழும் சிறுவர்களை மகிழச்சியுடன் வாழ்பவர்களாக மாற்றுவது மற்றும் சிறுவர் பாதுகாப்புச் செயன்முறையில் ஈடுபட்டுள்ள அலுவலர் குழுவொன்றை மேற்படி தோட்டத்துறையில் உருவாக்குவது. 2019 ஆம் ஆண்டில் காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், பதுளை, மொனராகலை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தோட்டத்துறை சார்ந்ததாக 74 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அவற்றின் மூலமான பயனாளிகளின் எண்ணிக்கை 2895 பேர் ஆகும்.

## இலங்கையில் கரையோர வலயங்களை மையமாகக் கொண்ட சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் (சியபத் சுரகும்)

கரையோர வலயங்களில் வாழும் சிறுவர்களின் பாதுகாப்புக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமாகும். இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கமாக இருப்பது, கரையோர வலயத்தில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் நிலவும் சவால்களை இனங்காணல், சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் கிராமிய மட்டத்தில் விழிப்புக் குழுக்களை உருவாக்குதல், சமுதாயப் பங்கேட்பு முறையியலின் கீழ் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் காணப்படுகின்ற சிக்கல்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் சிறுவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்காக கிராமிய சமுதாயத்தை வலுவூட்டுவதாகும். 2019 ஆம் ஆண்டில் 13 மாவட்டங்களில் இக்கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன், இதன் போது சமர்ப்பிக்கப்பட்ட சமுதாய கருத்திட்டங்கள் 07 இற்கு நிதி ஏற்பாடுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அதன் கீழ் விசேட சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 44 அமுல்படுத்தப்பட்டன.









## சிறுவயதில் கர்ப்பமடைவதைத் தடுப்பதற்காக மாவட்ட மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறு வயதில் கர்ப்பமடைவதைத் தடுப்பதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கமாக இருப்பது சிறுவயதில் கர்ப்பமடைவதற்கான அபாயத்தை எதிர்நோக்கக்கூடிய சிறுவர்களை அதிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக அவர்களின் தேவைகளை இனங்காணல் மற்றும் கல்வியில் ஈடுபடுத்துவதாகும். 2019 ஆம் ஆண்டில் இவ்வாறான 24 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.






## சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு பற்றி பாடசாலை ஆரம்ப ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு தொடர்பில் பாடசாலைகளிலுள்ள ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை 2019 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கமாக இருப்பது ஆரம்ப வகுப்பு ஆசிரியர்கள் மத்தியில் சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு பற்றிய நடவடிக்கைகள் தொடர்பில் புரிந்தணர்வை ஏற்படுத்தல், பாடசாலைகளில் இருந்து உடல்சார் தணடனையை நீக்குதல் மற்றும் சிறுவர்களுக்கு சாதகமான, பாதுகாப்பான பாடசாலை சூழலை உருவாக்குவதன் மூலம் சிறுவர்கள் மத்தியில் பாடசாலை வருவதற்கான ஊக்கத்தை ஏற்படுத்துவதாகும். 2019 இல் 34 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவ்வாறான 35 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இதன் கீழ் ஆரம்ப ஆசிரியர்கள் 2347 பேர் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.




## பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கான சாதகமான ஒழுக்கம் பற்றிய கையேடு

பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் திறமைகளை அபிவிருத்தி செய்யத் தேவையான வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உளவியல் சமூக அலகினால் இக்கையேடு தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கமாக இருப்பது சாதகமான ஒழுக்கம் பற்றிய புரிந்துணர்வை பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் ஒட்டுமொத்த சமுதாயத்தினருக்கும் பெற்றுக் கொடுத்தல், எதிர்காலத்தில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களாக எதிர்பார்க்கின்ற தரப்பினர்களுக்குத் தேவையான விழிப்புணர்வூட்டல் மற்றும் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல், இலங்கையில் சகல பிள்ளைகளையும் உளவியல் மற்றும் உடல்சார் தொல்லைகளிலிருந்து விடுவித்துக் கொள்ளல் மற்றும் நல்ல உடல்சார், உளவியல் சுகாதாரம் மற்றும் தன்னம்பிக்கை, சுயஒழுக்கக் கட்டுப்பாடு, பண்பாடுகளைக் கொண்ட தார்மீகமான சிறுவர் பரம்பரையை உருவாக்குவதாகும். 2019 ஆம் ஆண்டில் இக்கையேடு அச்சிடப்பட்டது.

## சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் தேசியக் கல்விக் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் மற்றும் கல்விப் பதவியணி உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் தேசிய கல்விக் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் மற்றும் கல்விப் பதவியணி உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. இதன் நோக்கமாக இருப்பது சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பல்வேறு துறைகள் சம்பந்தமான

மனப்பாங்கு, அறிவு, திறமைகளை ஆசிரியர்கள் மற்றும் கல்விப் பதவியணி உறுப்பினர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் வலுவூட்டல் மற்றும் உணர்வுப்பூர்வமான தொழில்வல்லுனர்களை உருவாக்குதல், அபாயகரமான நிலையிலுள்ள சிறுவர்களை ஏற்கெனவே இனங்கண்டு அது பற்றி உரிய பிரிவுகளை விழிப்புணர்வூட்டுவதன் மூலம் மென்மேலும் விளைதிறன்மிக்கவாறு இந்நிலைமையை முகாமைத்துவம் செய்துகொள்ள வழிகாட்டல் மற்றும் துஷ்பிரயோகத்திற்கு ஆளான ஒரு பிள்ளை தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய மிகப் பொருத்தமான நடவடிக்கை தொடர்பாக இந்த தொழில்வல்லுனர்களை விழிப்புணர்வூட்டுவதன் மூலம் பிள்ளைக்கு உச்சளவில் நலனை செய்துகொடுக்கும் வகையில் மேற்படி சிக்கல்களை முகாமைத்துவம் செய்துகொள்ளல் மற்றும் தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொண்டு முறையாக மேற்கொள்ளல். 2019 ஆம் ஆண்டில் இவ்வாறான 8 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், பயனாளிகளின் எண்ணிக்கை 2099 பேர் ஆகும்.

## அதிபர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் அதிபர்களை விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று 2019 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கமாக இருப்பது, நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்கும் பாடசாலைகளை சிறுவர் துஷ்பிரயோகம் அற்ற வலயமாக மாற்றியமைத்தல், பாடசாலைகளை சிறுவர்களுக்கு சாதகமான சூழலாக மாற்றியமைத்தல், சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாக பாதிக்கப்பட்ட, அநாதரவான சிறுவர்களை இனங்காணல் மற்றும் இலகுபடுத்துவதை மேற்கொள்ளல் மற்றும் சிறுவர் பங்கேற்பை வளர்ப்பதாகும். 2019 ஆம் ஆண்டு இவ்வாறான 20 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், அதன் மூலம் 1106 பேர் பயனடைந்துள்ளார்கள்.





## சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பொலிஸ் பயிற்சிக் கல்லூரி அலுவலர்களை விழிப்புணர்வூட்டல்

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக பொலிஸ் பயிற்சிக் கல்லூரிகளிலுள்ள அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. இதன் மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள நோக்கமாக இருப்பது, சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பொலிஸ் அலுவலர்களுக்கு அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களைப் பெற்றுக் கொடுத்தல், சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான சட்டம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தேவையான

தலையீடுகளை மேற்கொள்வதற்கு பொலிஸ் அலுவலர்களை ஊக்குவித்தல் மற்றும் அச்சுறுத்தலான நிலைமையிலுள்ள சிறுவர்களை முன்னதாகவே இனங்காண்பதன் மூலம் விளைதிறன்மிக்கவாறு அந்நிலைமைகளை முகாமைத்துவம் செய்துகொள்ள வழிகாட்டுவதாகும். இதற்கமைய 2019 ஆம் ஆண்டு 02 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

## சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் சுகாதார தொழில்வல்லுனர்கள் மற்றும் தொண்டர் அடிப்படையிலான சுகாதார ஊழியர்களின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களை வளர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் சுகாதாரத் துறை சம்பந்தப்பட்ட தொழில்வல்லுனர்களை விழிப்புணர்வூட்டுவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கமாக இருப்பது, சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகங்களில் சேவையாற்றுகின்ற நிருவாக குடும்ப சுகாதார சேவை அலுவலர்கள், பொது சுகாதார தாதிச் சகோதரி, குடும்ப சுகாதார சேவை அலுவலர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் தொண்டர் சுகாதார ஊழியர்களை சிறுவர்கள் தொடர்பில் உணர்வுப்பூர்வமானவ தொழில்வல்லுனர்களாக மாற்றியமைப்பதன் மூலம் சிறுவர்கள் தொடர்பிலான சகல தலையீடுகளையும் சிறுவர்களின் உச்சளவான நலனை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளல், சிறுவர்களை சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ள சமுதாய மட்டத்தில் தேவையான தலையீடுகளை மேற்கொள்வதற்கு மேற்படி தொழில்வல்லுனர்களை ஊக்குவித்தல், அரச அலுவலர் மற்றும் சமுதாய உறுப்பினர் என்ற வகையில் சிறுவர் துஷ்பிரயோகமொன்றின் போது அல்லது அவ்வாறான அச்சுறுத்தலான நிலைமையின் போது செயற்பட வேண்டிய முறை பற்றி முறையான அறிவு மற்றும் திறமைகளைப் பெற்றுக் கொடுத்தல், மேற்படி அலுவலர்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் கொண்டுள்ள உறவை வலுவூட்டுவதன் மூலம் சிறுவர்கள் தொடர்பிலான சம்பவங்களுக்கு முன்னுரிமை வழங்கி சுகாதார சேவை உதவிகளைப் பெற்றுக் கொள்வதுமாகும். இதற்கமைய, 2019 ஆம் ஆண்டில் இவ்வாறான 27 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. பயனாளிகளின் எண்ணிக்கை 1770 பேர் ஆகும்.

## சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் மருத்துவ பட்டப் பின் படிப்பு நிறுவகத்தில் கல்வி பயிலும் மருத்துவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் மருத்துவ பட்டப் பின் படிப்பு நிறுவகத்தில் கல்வி பயிலும் மருத்துவர்களை விழிப்புணர்வூட்டுவதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் நோக்கமாக இருப்பது சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் உணர்வுப்பூர்வமான மருத்துவ தொழில்வல்லுனர்களை உருவாக்குதல், மருத்துவ தொழில்வல்லுனர்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் கொண்டுள்ள உறவை வலுவூட்டுவதன் மூலம் சிறுவர்களுக்கு இடம்பெறும் துஷ்பிரயோகங்களை குறைத்துக் கொள்வதற்குத் தேவையான உதவிகளை

பெற்றுக் கொள்வதாகும். 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டதுடன், இதில் மருத்துவர்கள் 72 பேர் பங்கேற்றார்கள்.

## சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் (சிறுவர் இல்லங்களின்) நிருவாக சபை மற்றும் பதவியணியை பயிற்றுவித்தல்

சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் நிருவாக சபை மற்றும் பதவியணியினரை விழிப்புணர்வூட்டுவது அத்தியாவசியமான தரப்பினராக இனங்கண்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த ஆண்டில் இந்நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கமாக இருப்பது, சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை சிறுவர்களுக்கு நட்புறவான மற்றும் பாதுகாப்பான இடமாக மாற்றியமைப்பதல், நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தல் அபிவிருத்திக்காக சிறுவர் இல்லப் பராமரிப்பாளர்களின் திறன்களை விருத்தி செய்தல் மற்றும் சிறுவர்களின் உளவியல் சமூக நல்ல நிலைத்திருத்தலை மேம்படுத்துவதாகும். 2019 ஆம் ஆண்டில் 25 மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

## தடுத்துவைக்கப்பட்டுள்ள இல்லங்கள் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகளிலுள்ள சிறுவர்கள் மற்றும் பதவியணியினருக்கான உளவியல், சமூக பயிற்சி

தடுத்துவைக்கப்பட்டுள்ள இல்லங்கள் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகளிலுள்ள சிறுவர்கள் மற்றும் பதவியணியினருக்கு உளவியல், சமூக பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது. இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கமாக இருப்பது, தடுத்துவைக்கப்பட்டுள்ள இல்லங்களிலுள்ள சிறுவர்களை அடிப்படையாகக் கொண்டு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான தடுத்துவைக்கும் இல்லங்கள் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ள சிறுவர்களின் உளவியல் நலனுக்காக உளவியல் சமூக தலையீடு மற்றும் முகாமைத்துவம் செய்தல், மேற்படி சிறுவர்களின் ஆக்கபூர்வமான அம்சங்களை வளர்த்தல், சிறுவர்களின் ஆளுமையை விருத்தி செய்தல் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகள் மற்றும் சிறுவர் தடுப்பு இல்லங்களில் சேவையாற்றும் பதவியணி உறுப்பினர்களின் அறிவு, மனப்பாங்கு, திறன்களை அபிவிருத்தி செய்வதற்காக 2019 இல் இவ்வாறான 06 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

## பாடசாலை ஆலோசனை ஆசிரியர்களுக்கான உளவியல் சமூக பயிற்சி

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பாடசாலை ஆலோசனை ஆசிரியர்களுக்கு உளவியல் சமூக விழிப்புணர்வூட்டும் இந்த நிகழ்ச்சித்திட்டம் 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கமாக இருப்பது சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் சிறுவர்களுக்கு உளவியல், சமூக ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் ஆலோசனை வழங்குவது தொடர்பில் பாடசாலை ஆலோசனை ஆசிரியர்களின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களை வளர்த்தல், பாடசாலைகளில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாதல் அல்லது ஆளாகக்கூடிய வாய்ப்புக்களைக் குறைப்பதற்குத் தேவையான உளவியல் சமூக தலையீடுகளை மேற்கொள்ளும் திறன்கள் மற்றும் மேற்படி திறன்களை அமுல்படுத்துவது தொடர்பில் பாடசாலை ஆலோசனை ஆசிரியர்களை விழிப்புணர்வூட்டல், பாடசாலைகளினுள் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பாடசாலை ஆலோசனை ஆசிரியர்களின் வகிபாகத்தை மென்மேலும் வலுவூட்டல், விளைதிறன்மிக்க நிலைமைக்கு மாற்றியமைத்தல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் உரிமைகளை உறுதி செய்யும் பாதுகாப்பான சிறுவர் நட்புறவுச் சூழலை பாடசாலைகளில் ஏற்படுத்துவதாகும். 2019 ஆம் ஆண்டு மேல் மற்றும் வடமேல் மாகாணங்களில் 02 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு ஆலோசனை ஆசிரியர்கள் 110 பேர் விழிப்புணர்வூட்டப்பட்டார்கள்.





## இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கையில் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தகவல்களை ஊடகத்துறை நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்து சமுதாயத்தினருக்குக் கொண்டு செல்வதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. அதற்காக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் உதவியைப் பெற்றுக் கொண்டு சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான ஊடக அறிவித்தல்களை ஊடகங்களுக்கு வெளியிடுதல் மற்றும் விடயரீதியான அம்சங்கள் தொடர்பிலான ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடாத்துவதும் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கமாக இருப்பது, சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் சிறுவர்கள், பெற்றோர் மற்றும் வளர்ந்தவர்களை விழிப்புணர்வூட்டல் மற்றும சமுதாயத்தில் சிறுவர் பாதுகாப்பு பற்றிய கலந்துரையாடலை உருவாக்குவதாகும். 2019 ஆம் ஆண்டில் 'ரங்கிரி ஸ்ரீலங்கா வானொலிச் சேவையின் குருதா பிலிசந்தர' நிகழ்ச்சித் தொடரில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான சிங்கள மொழி மூலமான 05 நிகழ்ச்சிகளும்,

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து தமிழ் மொழி மூலமான 02 நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

## அச்சிடப்பட்ட அம்சங்களை வடிவமைத்தல்

சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்காக பல்வேறு தொணிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு துண்டுப் பிரசுரங்கள், போஸ்டர்கள், புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் போன்ற அச்சிடப்பட்ட வெளியீடுகளை தயார் செய்து இதன் மூலம் சமுதாயத்தினரை அறிவுறுத்தி சிறுவர் துஷ்பிரயோகத்தை குறைப்பதற்கு பங்களிப்புப் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட பணியொன்றாக விசேட தேவைகளைக் கொண்டுள்ள சிறுவர்களுக்கான வெளியீடுகளைத் தயார் செய்வது தகவல் மற்றும் ஊடகத்துறைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. கட்புலனற்ற சிறுவர்களுக்காக பிரேல் முறையைப் பயன்படுத்தி துண்டுப் பிரசுமொன்று தயார் செய்து விநியோகிக்கப்பட்டது. சிறுவர்களுக்கு எதிரான சைபர் குற்றச் செயல்களைக் குறைப்பதற்கான துண்டுப்பிரசுரமும் தயார் செய்யப்பட்டது.

## சிறுவர் பாதுகாப்பு விடயம் தொடர்பில் பாடசாலை ஊடக சமூக நிகழ்ச்சித்திட்டம்

துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது தொடர்பில் பாடசாலை ஊடக பிரிவுகள் ஊடாக பாடசாலைகளில் பிரபல்யப்படுத்துவது இதன் பிரதான நோக்கமாகும். மாணவ, மாணவியருக்கு குறித்த விடயம் தொடர்பிலான பயிற்சியும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இந்த பாடசாலை ஊடக சமூக வழிகாட்டல் தொகுப்பு களனி பல்கலைக் கழகத்தின் வெகுசன ஊடகக் கற்கைப் பிரிவின் ஒத்துழைப்புடன் தயார் செய்யப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் இதன் கீழ் 02 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.





## சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினம்

சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினம் இந்த ஆண்டிலும் கொண்டாடப்பட்டது. ''சிறுவர் ஊழியத்தை நிறைவு செய்வோம். புதுக் கனவை நனவாக்குவோம்'' எனும் தொணிப்பொருளை

மையமாகக் கொண்டு சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் பல்வேறு சமூக, பொருளாதார சிக்கல்கள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளவர்கள், ஓரங்கப்பட்ட மற்றும் பாதுகாப்பற் நிலையிலுள்ள சிறுவர்களின் கல்வி உரிமைகளைப் பாதுகாத்தல், சிறுவர்கள் இரட்டிப்பாக பாதிக்கப்படுவதைக் குறைத்தல் மற்றும் சிறுவர்கள் பாடசாலைகளை விட்டு வெளியேறும் போக்கைக் குறைக்கும் நோக்கத்துடன் இதனை முன்னிட்டு உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் 25 மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகள் 2115 பேருக்கு கல்விக்கான உதவிகள் இதன் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

## உலக சிறுவர் தினம்

உலக சிறுவர் தினத்தைக் கொண்டும் நிகழ்வுகள் இந்த ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டன. இம்முறை தொனிப்பொருள் ‘‘நட்புறவான நாட்டின் மூலம் பிள்ளைகளை வெற்றிபெறச் செய்வோம்’’ என்பதாகும். உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நாட்டின் சகல சிறுவர் இல்லங்களையும் உள்ளடக்கும் வகையில் நூல் தொகுதிகள் விநியோகிக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 25 மாவட்டங்களிலும் அமைந்துள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் 372 இற்கு நூலகங்களுக்கான புத்தகங்களை வழங்கிவைக்கப்பட்டன.

2019.10.01 ஆம் திகதி உலக சிறுவர் தினத்தன்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தகவல் மற்றும் ஊடகப் பிரிவினால் செய்தி அறிவித்தல் ஒன்றின் மூலம் சமுதாயத்தினர் அறிவுறுத்தப்பட்டார்கள்.

## சர்வதேச சிறுமியர் தினம்

சிறுமியருக்கான சர்வதேச தினத்தைக் கொண்டாடுவதற்கான இம்முறை தொனிப்பொருள் ‘‘சிறுமியர் பலம்மிக்கவர்கள் - அவர்களை தடுத்துநிறுத்த முடியாது’’ என்பதாகும். இத்தினத்தன்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தகவல் மற்றும் ஊடகத்துறை பிரிவினால் ஊடக அறிவித்தல் மூலம் சமுதாயத்தினர் அறிவுறுத்தப்பட்டார்கள்.

## கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகள்

இலங்கையில் பல்வேறு நிறுவனங்களினாலும் கல்விக் கண்காட்சிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. மேற்படி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்ற கோரிக்கைகளுக்கு அமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணி தொடர்பில் அறிவுறுத்தும் கல்விக் கண்காட்சிக் கூடங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டில் இவ்வாறான 06 கண்காட்சிகளுக்கு பங்களிப்பு வழங்கப்பட்டது.



## சுனாமி கெப்பகரு பெற்றோர் பாதுகாவலர் மதிப்பீட்டுச் சபை

2004 ஆம் ஆண்டு முழு நாட்டையும் தாக்கிய சுனாமி அனர்த்தத்தின் விளைவாக பெற்றோரை இழந்துள்ள 21 வயதுக்குக் குறைவான ஒவ்வொரு பிள்ளை மற்றும் இளமைப்பருவ பிள்ளை தொடர்பிலுமான நலன்புரி சம்பந்தமாக இதன் போது கவனம் செலுத்தப்படுகின்றது. பெற்றோரை இழந்துள்ள அல்லது பெற்றோர் இருவரில் ஒருவரை இழந்துள்ள மற்றும் உயிர் வாழும் தாய் அல்லது தந்தைக்கு அரவணைப்புச் செய்ய மற்றும் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்க ஆற்றல் இல்லாத ஒவ்வொரு பிள்ளைக்கும், இளம் பருவத்தினருக்கும் 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஊடாக அரவணைப்புச் செய்துகொடுக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக கெப்பகரு பெற்றோர் பாதுகாவலர் அரவணைப்பு நடவடிக்கைகள், பின்னாய்வு நடவடிக்கைகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டில் மேற்படி சிறுவர்களுக்கு பெற்றோர் பாதுகாவலர் அரவணைப்பு மதிப்பீட்டுச் சபைகள் 07 நடாத்தப்பட்டுள்ளன. இதன் கீழ் பிள்ளைகள் 42 பேருக்கு மாதாந்தம் கல்வி பயிலும் உதவிகளும் வழங்கப்பட்டது.

## உளவியல் ஆரோக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்கான உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உளவியல், சமூகப் பிரிவுக்கு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தருகின்ற பிள்ளைகள் மற்றும் உளவியல் சமூக உதவிகளை எதிர்பார்க்கின்ற சிறுவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்படுகின்றன. உளவியல் சமூகப் பிரிவுக்கு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தருகின்ற

பிள்ளைகள் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்வதற்காக வருகை தருகின்ற பிள்ளைகளுக்கு இதன் கீழ் பாடசாலை உபகரணங்களும் கையளிக்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் சிறுவர்கள் 223 பேருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. சிறுவர்களுக்கு ஆலோசனை வழங்குதல், வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்வதற்காக சிறுவர்களை ஆயத்தப்படுத்தல் மற்றும் உளவியல் சமூகத் தலையீடுகளும் இதனூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

## பாதிக்கப்பட்ட, ஓரங்கப்பட்டப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற சிறுவர்களுக்கு உளவியல் சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் (திரிய நிகழ்ச்சித்திட்டம்)

பாதிக்கப்பட்ட, ஓரங்கப்பட்டப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற சிறுவர்களுக்கு உளவியல், சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் இந்த நிகழ்ச்சித்திட்டம் 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை எதிர்பார்ப்பது பாதிக்கப்பட்ட, ஓரங்கப்பட்டப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற சிறுவர்களுக்கு உளவியல், சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அச்சிறுவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை வலுவூட்டுவதாகும். 2019 ஆம் ஆண்டில் 229 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த பிள்ளைகள் 2294 பேருக்கு இதன் மூலம் பயன்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

## சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்கும் சமய மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களை (சிறுவர் அபிவிருத்தி நிலையம்) ஒழுங்குறுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர்களின் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை இன்று பல்வேறு நடவடிக்கைகளின் ஊடாக மேற்படி நோக்கத்தை நிறைவேற்றி வருகின்றது. 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்தின் (14) (க) பிரிவுக்கமைய சிறுவர்களுக்கு சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்கும் சகல சமய மற்றும் அறக்கட்டளை நிலையங்களையும் (சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) கண்காணிப்புச் செய்வதும் ஒழுங்குறுத்துவதும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் இல்லங்களில் வாழும் சிறுவர்களுக்கு உச்சளவான நலனை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் 2019 ஆம் ஆண்டில் மேற்படி சிறுவர் இல்லங்களை கண்காணிப்புச் செய்யும் பணிகள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டன. இதன் நோக்கமாக இருப்பது, சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்கும் சமய மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களை (சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) கண்காணிப்புச் செய்தல் மற்றும் குறித்த தீர்வுகளைக் கண்டறிவது தொடர்பில் சகல நிறுவனங்களுடன் இணைந்து கூட்டு ஒழுங்குறுத்தல் அணுகுமுறையின் கீழ் மென்மேலும் வினைத்திறன்மிக்க மற்றும் விளைதிறன்மிக்கவாறு இப்பணிகளை மேற்கொள்ளல், நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தல், பாதுகாப்பை உறுதி

செய்யும் வகையில் மென்மேலும் பாதுகாப்பான நிறுவனச் சூழலை உருவாக்குதல், சேவையில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்வதாகும். இந்த ஆண்டில் 372 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், சிறுவர்கள் சுமார் 8500 பேர் இதன் மூலம் பயனடைந்துள்ளார்கள்.

## அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் அலுவலர்களை பயிற்றுவித்தல் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள்

திடீர் அனர்த்த நிலைமைகளின் போது சிறுவர்களைப் பாதுகாப்பது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு அதிகாரசபையின் மாவட்ட மற்றும் பிரதேச ரீதியான அலுவலர்களுக்குத் தேவையான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்குசார் அபிவிருத்தியைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் இவ்வாறான நிலைமைகளின் போது சிறுவர்களைப் பாதுகாத்துக் கொள்வது இதன் நோக்கமாகும். இதன் போது மாவட்ட, பிரதேச அலுலவர்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் அலுவலர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றார்கள். 2019 ஆம் ஆண்டில் 01 நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

## மாதாந்த மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தல்

இக்கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் மாவட்ட அலுவலர்களினால் குறித்த மாவட்டத்தில் நடாத்தப்படுகின்றன. மாவட்ட அலுவலர்கள் மற்றும் மாவட்டத்தின் உளவியல் சமூக அலுவலர்களினால் சகல பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களுடனும் இணைந்து இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்படுகின்றது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது மாவட்ட மட்டத்தில் மற்றும் பிரதேச மட்டத்தில் தமது பணிகளை முறையாகவும், விளைதிறன்மிக்கவாறும் மேற்கொள்வதாகும். 2019 ஆம் ஆண்டில் இவ்வாறான 191 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## மாவட்ட அலுவலர்களுக்கான காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தல்.

இக்கூட்டமானது காலாண்டுக்கு ஒன்று வீதம் சகல மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் சகல மாவட்ட உளவியல் சமூக அலுவலர்களையும் தலைமை அலுவலகத்திற்கு அழைத்து நடாத்தப்படுகின்றது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கமாக இருப்பது இந்த ஆண்டுக்குரிய அபிவிருத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தல், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் மாவட்ட உளவியல் சமூக அலுவலர்களின் பணிகளை கண்காணிப்புச் செய்தல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் போது எதிர்கொள்ளும் சிக்கல்கள், தடைகள் மற்றும் சவால்களை இனங்காண்பதாகும். 2019 ஆம் ஆண்டில் 02 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### திட்டமிடல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் செயலமர்வுகள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தல் மற்றும் மதிப்பீடு செய்யப்படுகின்றது. அதன் மூலம் அதிகாரசபையின் மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்களுக்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவத்துக்குத் தேவையான திறன் அபிவிருத்தியை ஏற்படுத்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முன்மதிப்பீடு மற்றும் பின்னாய்வு முறையியல்கள் அமுல்படுத்தப்படுகின்றன. மாகாண அலுவலர்கள் 09 பேரினாலும் அனுப்பப்படுகின்ற மாதாந்த அறிக்கைகளுக்கு அமைய ஒழுங்குறுத்தல் மற்றும் மதிப்பீடுகள் மாதாந்தம் மேற்கொள்ளப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டில் இவ்வாறான 07 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.





### வீதிச் சிறுவர்கள் மற்றும் யாசகர்கள் பற்றிய கற்கை

வீதிச் சிறுவர்கள் மற்றும் யாசகர்கள் பற்றிய கற்கையை மேற்கொள்வது முக்கியமான பணியொன்றாகும். இதனை இனங்கண்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையானது இக்கற்கையை மேற்கொள்ளும் ஆரம்ப பணிகள் இந்த ஆண்டில் முன்னெடுத்தது. இதற்கமைய மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்களிடமிருந்து கேள்விக் கொத்து மூலம் தகவல்களை சேகரித்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### மாவட்ட ரீதியிலான சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் கூட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மாவட்ட ரீதியாக இயங்கிவருகின்ற அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய நிகழ்ச்சித்திட்டமொன்றாகும். இதன் நோக்கமாக இருப்பது அரசசார்பற்ற நிறுவனங்களுடன் நல்லதொரு ஒருங்கிணைப்பை மேற்கொண்டு தேசிய சிறுவர்

பாதுகாப்ப அதிகாரசபை சட்டத்தின் அடிப்படையில் சிறுவர்ளுக்கு உச்சளவான நலனை செய்துகொடுத்தல் மற்றும் அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்வதாகும்.

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிய தகவல் இணையத்தளத்தை அபிவிருத்தி செய்தல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் www.childprotection.gov.lk மற்றும் www.youthink.lk எனும் முகவரியின் கீழ் சிறுவர் பாதுகாப்பு பற்றிய தகவல்களை கொண்ட இணையத்தளங்கள் அபிவிருத்தி செய்யயப்படுகின்றன.

சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்து அவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்கு ஏற்புடையதான தகவல்கள் இப்புதிய இணையத்தளத்தில் சிறுவர்களுக்கு நட்புறவான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேற்படி இணையத்தளத்தை இற்றைப்படுத்துவதானது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தகவல்கள் மற்றும் ஊடகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. உத்தியோகபூர்வ இணையத்தளத்தை இற்றைப்படுத்துவது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நூலகத்தை அபிவிருத்தி செய்தல்

சிறுவர் பாதுகாப்பு விடயத்துறை தொடர்பில் ஆய்வு நூலகமொன்றை வடிவமைக்கத் தேவையான ஆரம்ப கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக அதிகாரசபைக்கு வருகைதருகின்ற ஆட்களுக்கு மிகஇலகுவாக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு புதிய நூலக வளவொன்றைத் தயார் செய்வதற்கான திட்டமிடல் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது பொறியியல் பணிகள் பற்றி மத்திய ஆலோசனைப் பணியகத்தினால் அதன் ஒழுங்கமைப்பு வரைபடம் தயார் செய்யப்பட்டதுடன், அடுத்துவரும் ஆண்டுகளில் இந்த நூல் நிலையத்தை ஒழுங்குபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு நூலகத்தை தாபித்ததன் முக்கிய நோக்கமாக இருப்பது உச்சளவான தரத்தைக் கொண்டதாக தகவல் சேவைகள் மற்றும் தகவல் மூலங்களைப் பெற்றுக் கொடுத்து சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான ஆராய்ச்சிகளுக்கு ஒத்துழைப்புமிக்க சூழலை உருவாக்குவதாகும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு வருகைதருகின்ற ஆராய்ச்சியாளர்களுக்கு, அலுவலர்களுக்கு மற்றும் கல்வி நிறுவனங்களின் ஏனைய ஆட்களுக்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் நூல்களும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. அத்துடன், கல்விமான்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தகவல்களும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டில் வாசிப்பு மாததத்தை முன்னிட்டு அதிகாரசபையின்

அலுவலர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்றும் அமுல்படுத்தப்பட்டது.

### வெகுசன ஊடக ஒருங்கிணைப்பு

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14(ஈ) மற்றும் (ஐ) பிரிவுகளுக்கு அமைய சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான பிரதான ஊடகமான வெகுசன ஊடகம் ஊடாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செய்தியை சமூகமயப்படுத்தும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் தகவல் மற்றும் ஊடகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய, பல்வேறு தொனிப்பொருள்களின் கீழ் 2019 ஆம் ஆண்டில் 09 ஊடக அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

### சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் வாக்குமூலங்களை வீடியோ ஒளிப்பதிவு செய்தல்

சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாக பாதிக்கப்படுகின்ற சிறுவர்களின் வாக்குமூலங்களை வீடியோ ஒளிப்பதிவு செய்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் விசேட அலகொன்று இயங்கிவருகின்றது. 1999 இன் 32 ஆம் இலக்க சாட்சியங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு அமைய துஷ்பிரயோகத்திற்கு ஆளான பிள்ளையின் வாக்குமூலங்களை வீடியோ ஒளிப்பதிவு செய்து அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இதன் மூலம் செயற்பட முடியும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 2019 ஆம் ஆண்டில் 73 வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்துள்ளது. கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ள நீதிமன்றங்களுக்கு ஒளிப்பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களின் 57 பிரதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

### 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்திற்கு அமைய ''சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்றல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் மேற்படி முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பித்தல்'' என்பதை உச்சளவில் விளைதிறன் மிக்கதாக்கவும், வினைத்திறன்மிக்கதாக்கவும் 1929 எனும் இலங்கை சிறுவர் தொலைபேசிச் சேவையானது 2010 ஜூலை 22 ஆம் திகதி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வளவில் தாபிக்கப்பட்டது. இது சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளல் மற்றும் அவற்றுக்குத் துரிதமாக பதிலளிக்கும் முன்னோடிப் பொறிமுறையாதல் ஆகும். இதன் மூலம் சமூகத்தில் மறைந்து காணப்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

கட்டணம் அறவிடாது 24 மணி நேரமும் இச்சேவை இயங்கிவருகின்றது. இதற்கு அழைப்பு விடுப்பதன் மூலம் எந்தவொரு நபரும் சிறுவர்கள் தொடர்பில் எழுகின்ற சிக்கல்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றியும் முறைப்படு செய்ய முடியும். இதன் மூலம் ஆலோசனை

சேவைகளும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. இந்த சேவை பிரதானமாக சிறுவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்கும் வளர்ந்தவர்களுக்கும், சிறுவர்கள் தொடர்பில் அவர்களுக்குள்ள சிக்கல்கள், பிள்ளைகளை வளர்த்துக்கொள்வதற்கான நடைமுறைகள் போன்றன தொடர்பில் கலந்துரையாடவும் இச்சேவையைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். 2019 ஆம் ஆண்டில் இந்தத் தொலைபேசி இலக்கத்திற்கு 126,095 அழைப்புக்கள் கிடைத்துள்ளன. இந்தத் தொலைபேசி அழைப்புக்களில் 7,949 ஆன அழைப்புக்கள் முறைப்பாடுகளாகக் கிடைத்துள்ளன.

## சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள்

சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பல்வேறு விதமாகக் கிடைக்கின்றன. மேற்படி முறைகள் பின்வருமாறாகும்.

01. 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவையூடாக கிடைக்கின்ற முறைப்பாடுகள்.
02. அதிகாரசபைக்கு நேரடியாக வருகை தந்து வாய் மூலமாக சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள்.
03. கடிதங்கள் மூல கிடைக்கின்ற முறைப்பாடுகள்.
04. மின்னஞ்சல் மூலம் அல்லது சைபர் வழிமுறையில் கிடைக்கின்ற தகவல்கள்

இவ்வாறு கிடைக்கின்ற முறைப்பாடுகள் அனைத்தும் துரிதமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதுடன், முறைப்பாட்டின் தன்மைக்கமைய அவை வகைப்படுத்தப்படுகின்றன. இந்த ஆண்டில் இதுவரை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்துள்ள ஒட்டுமொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 8,558 ஆகும்.

### 2019 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை (மாவட்ட ரீதியாக)

| தொடர் இல. | மாவட்டம் | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கொழும்பு | 1167 |
| 02 | களுத்துறை | 478 |
| 03 | கம்பஹா | 888 |
| 04 | கண்டி | 390 |
| 05 | மாத்தளை | 140 |
| 06 | நுவரெலியா | 177 |
| 07 | காலி | 537 |
| 08 | மாத்தறை | 301 |

| | | |
|---|---|---|
| 09 | ஹம்பாந்தோட்டை | 335 |
| 10 | யாழ்ப்பாணம் | 175 |
| 11 | மன்னார் | 80 |
| 12 | வவுனியா | 106 |
| 13 | முல்லைத்தீவு | 122 |
| 14 | கிளிநொச்சி | 141 |
| 15 | மட்டக்களப்பு | 166 |
| 16 | அம்பாறை | 201 |
| 17 | திருகோணமலை | 133 |
| 18 | குருநாகல் | 726 |
| 19 | புத்தளம் | 375 |
| 20 | அநுராதபுரம் | 487 |
| 21 | பொலன்னறுவை | 229 |
| 22 | பதுளை | 224 |
| 23 | மொனராகலை | 221 |
| 24 | இரத்தினபுரி | 471 |
| 25 | கேகாலை | 288 |
| | ***மொத்தம்*** | **8558** |

**2019 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் தன்மைக்கு அமைய வகைப்படுத்தல்**

| **தொடர் இல.** | **முறைப்பாடுகளின் தன்மை** | **முறைப்பாடுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | 27. ACO சட்டபூர்வமல்லாதவாறு தடுத்து வைத்திருப்பதை தடை செய்தல் | 4 |
| 02 | 286A சிறுவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற ஆபாச வெளியீடுகள் மற்றும் காட்சிப்படுத்தல் | 23 |
| 03 | 288 சிறுவர்களை பிச்சை எடுக்கச் செய்தல் அல்லது ஆட்கடத்தல் | 299 |

| | | |
|---|---|---|
| 04 | 288B. மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை வியாபாரம் செய்வதற்கு பிள்ளைகளை வாடகைக்குப் பெறல் அல்லது சேவையில் ஈடுபடுத்தல் | 29 |
| 05 | 308 - 12 வயதுக்கு குறைவான ஒரு பிள்ளை, பெற்றோர் அல்லது பிள்ளையின் பாதுகாவலரான ஆளொருவரினால் நீக்கம் செய்யப்படல் அல்லது கைவிடப்படல் | 2 |
| 06 | 308 A. பிள்ளைகளை சித்திரவதைக்கு ஆளாக்குதல் | 2342 |
| 07 | பாலியல் துன்புறுத்தல் | 594 |
| 08 | 35 CYPO – நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் பாதுகாப்புத் தேவையான பிள்ளைகள் மற்றம் இளம் பிள்ளைகள் | 7 |
| 09 | சட்டரீதியான பாதுகாவலரிடமிருந்து அகற்றல் | 109 |
| 10 | 352. கடத்திச் செல்லல் | 44 |
| 11 | 360B. சிறுவர் பாலியல் சுரண்டல் | 4 |
| 12 | 360C. ஆட்களை வியாபாரம் செய்தல் | 119 |
| 13 | 360E. ஒரு சிறுவனை தூண்டுவதற்காக நச்சரித்தல் | 14 |
| 14 | 363. பெண்களை வன்புணர்தல் | 294 |
| 15 | 364A. விபச்சாரம் | 1 |
| 16 | 365. இயற்கைக்கு முரணான தவறுகள் | 1 |
| 17 | 365A. ஆட்களுக்கு இடையே கடும் ஒழுங்கீனமான செயற்பாடுகள் | 1 |
| 18 | 365B. கடும் பாலியல் துஷ்பிரயோகம் | 288 |
| 19 | 71.CYPO - பாரபட்சம் காட்டல் | 906 |
| 20 | 76. CYPO – புகையிலை விற்பனை | 1 |
| 21 | சிறுவர் ஊழியம் | 265 |
| 22 | கட்டாயக் கல்வி | 1290 |
| 23 | குடும்ப வன்முறை | **79** |
| 24 | சிறுவர் துர்நடத்தை | **337** |
| 25 | வேறு | **1505** |
| | ***மொத்தம்*** | **8558** |

## சட்ட ரீதியான பணிகள்

துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்களைப் பாதுகாத்தல், அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழிப்பதற்கான சட்ட ரீதியான நிருவாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல், சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் சிறுவர் துஷ:பிரயோகம் தொடர்பில் சகல வகையிலுமான விசாரணைகள் மற்றும் குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தல், அது சம்பந்தமாக நிதிமன்றங்களில் ஆஜராதல் போன்ற பணிகள் சட்டப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதிகார சபையின் சட்டத்திற்கு மேலதிகமாக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் தொடர்பிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டம்
- 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறை நடவடிக்கைகளைத் தடுக்கும் சட்டம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் இயங்கிவருகின்ற சட்டப் பிரிவினால் 2019 ஆம் ஆண்டில் சட்ட ஆலோசனை வழங்குவதன் கீழ் தொலைபேசி ஊடாக 593 உம் மற்றும் சேவை பெறுநர்கள் 138 பேர் அதிகாரசபைக்கு வருகைதந்தும் சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர். மேலும் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்பில் ஆஜராவதற்காக 24 தடவைகள் பங்களிப்பு வழங்கப்பட்டது. அத்துடன் 99 கூட்டங்களிலும் பங்கேட்கப்பட்டது.

## 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கு அமைய வழக்குகளின் எண்ணிக்கை

| **நீதிமன்றம்** | **வழக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|
| அம்பாறை | 11 |
| மட்டக்களப்பு | 14 |
| கொழும்பு | 04 |
| காலி | 09 |
| ஹம்பாந்தோட்டை | 28 |
| களுத்துறை | 03 |
| மாத்தறை | 11 |
| ***மொத்தம்*** | **80** |

## சட்டப் பிரிவு நீதிமன்றங்களில் ஆஜரான சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை

| தொடர் இல. | நீதிமன்றம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | உயர் நீதிமன்றம் | 02 |
| 02 | பத்தரமுல்லை சிறுவர் நீதிமன்றம் | 09 |
| 03 | கங்கொடவில நீதவான் நீதிமன்றம் | 08 |
| 04 | குளியாப்பிட்டி நீதவான் நீதிமன்றம் | 01 |
| | ***மொத்தம்*** | **20** |

## விசேட பொலிஸ் புலனாய்வுகள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவையூடாக மற்றும் வேறு விதமாக பொது மக்களிடமிருந்து கிடைக்கின்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகளை துரிதமாக புலனாய்வு செய்து சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு இயங்கி வருகின்றது. அதற்காக 24 மணிநேரமும் இயங்கும் வகையில் விசேட பொலிஸ் புலனாய்வு அலகின் அலுவலர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

**2019 ஆம் ஆண்டு விசேட பொலிஸ் புலனாய்வு அலகினால் விசாரணை மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

| தொடர் இல. | முறைப்பாட்டின் தன்மை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை | விசாரிக்கப்படுகின்ற எண்ணிக்கை | விசாரணை நிறைவு செய்யப்பட்டவை | போலியானவை | நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எண்ணிக்கை | நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்ற எண்ணிக்கை | பிற பொலிஸ் நிலையங்களுக்கு விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறிய குற்றச் செயல்கள் | 09 | - | 09 | - | 09 | 09 | - |
| **02** | நானாவித முறைப்பாடுகள் | - | - | - | - | - | - | - |
| **03** | சிறுவர் குற்றச்செயல்கள் | 36 | - | 36 | 04 | 36 | 36 | - |

| மொத்தம் | 45 | - | 45 | 04 | 45 | 45 | - |
|---|---|---|---|---|---|---|---|

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அலுவலர்களுக்கு 2019 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகள்**

| | பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | திகதி | இடம் | பங்கேற்ற அலுவலர்களின் எண்ணிக்கை | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | சாதகமான உளவியல் மற்றும் மனக் கவலை முகாமைத்துவம் | 2019.11.28 | | 9 | ஒரு நாள் |
| 02 | அரச துறையின் அலுவலக முறையியல் பற்றிய செயலமர்வு | 2019.12.09 மற்றும் 2019.12.10 | | 5 | இரண்டு நாள் |
| 03 | களஞ்சிய முகாமைத்துவம், வருடாந்த பொருட் கணிப்பீடு மற்றும் சொத்துக்களை அகற்றல் பற்றிய செயலமர்வு | 2019.11.28 மற்றும் 2019.11.29 | | 2 | இரண்டு நாள் |
| 04 | ஒழுக்காற்று நடவடிக்கைமுறை | 2019.11.25 மற்றும் 2019.11.26 | | 3 | இரண்டு நாள் |
| 05 | திறன் மதிப்பீடு மற்றும் கே.பி.ஐ. பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுத்தல் | 2019.11.25 | | 2 | ஒரு நாள் |
| 06 | தகவல் தொழில்நுட்ப பெறுகை முகாமைத்துவ செயலமர்வு | 2019.12.09 மற்றும் 2019.12.10 | | 1 | இரண்டு நாள் |
| 07 | போக்குவரத்து முகாமைத்துவம் பற்றிய இரண்டு நாள் செயலமர்வு | 2019.12.09 மற்றும் 2019.12.10 | | 1 | இரண்டு நாள் |
| 08 | வாடிக்கையாளர் சேவை பற்றிய இரண்டு நாள் செயலமத’வு | 2019.11.21 மற்றும்2019.11.22 | | 1 | இரண்டு நாள் |
| 09 | விளைதிறன்மிக்க சமர்ப்பித்தல் ஆற்றல்கள் | 2019.11.21 மற்றும்2019.11.22 | இலங்கை மன்றக் கல்லூரி | 11 | இரண்டு நாள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | முகாமைத்துவ உதவியாளர்களுக்கான தகவல் தொழில்நுட்பம் | 2019.12.05 மற்றும் 2019.12.06 | | 4 | இரண்டு நாள் |
| 11 | கணினி வலையமைப்பின் அடிப்படை அம்சங்கள் | 2019.12.16, 2019.12.17 மற்றும்2019.12.18 | | 2 | மூன்று நாள் |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
## 2019.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று (ரூபா)

| விபரம் | குறிப்பு | 2019 | 2018 |
|---|---|---|---|
| *வருமானம்* | | | |
| மீண்டெழும் கொடை - திறைசேரி | | 257,512,685.29 | 236,480,000.00 |
| - ஏனைய நிறுவனங்கள் | 1A | - | 68,494.88 |
| - ஏனைய வருமானங்கள் | 1B | 24,027,617.79 | 23,503,171.77 |
| தேசிய யெற்றிட்டத்திற்கான திறைசேரியின் கொடை | | 54,449,445.60 | 45,078,475.70 |
| தேசிய சிறுவர்பாதுகாப்பு நிதியத்திற்கான கொடை | 1C | - | 1,000.00 |
| **வருமானம்** | | **335,989,748.68** | **305,131,142.35** |
| ***செலவினம்*** | | | |
| நிருவாகச் செலவினம் | 2 | 234,119,826.14 | 218,712,109.88 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | 3 | 98,969,835.79 | 93,776,458.60 |

| | | | |
|---|---|---|---|
| கருத்திட்டச் செலவினம் | 4 | - | 68,494.88 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் செலவினம் | 5 | - | - |
| நிதிச் செலவினம் | 6 | - | 12,967.08 |
| **மொத்த செலவினம்** | | **333,089,661.93** | **312,570,030.44** |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை / (குறை) | 7 | **2,900,086.75** | **(7,438,888.09)** |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
## 2019.12.31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக் கூற்று

ரூபா

| விபரம் | குறிப்பு | 2019 | 2018 |
|---|---|---|---|
| ***சொத்துக்கள்*** | | | |
| ***நடைமுறையல்லாச் சொத்துக்கள்*** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 8 | 67,929,606.03 | 86,302,081.19 |
| பூர்த்தி செய்யப்படாத வேலை வவுனியா கட்டிடம் நிர்மாணம் | | 3,982,463.55 | 3,026,148.14 |
| குத்தகைக் காணி | | 20,928,865.41 | 21,707,906.51 |
| முதலீடும், சேமிப்பும் | 9 | 7,694,089.44 | 7,982,626.65 |
| நீண்டகால கிடைக்க வேண்டிய சொத்துக்கள் | 10 | 131,147.25 | 501,043.36 |
| | | **100,666,171.68** | **119,519,805.85** |
| ***நடைமுறைச் சொத்துக்கள்*** | | | |
| இருப்பு - எழுதுகருவி | | 364,096.06 | 487,502.77 |
| இடர் கடன் | | 470,734.14 | 470,734.14 |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் | 11 | 8,889,325.37 | 21,053,750.23 |
| முற்பணக் கொடுப்பனவு | 12 | 639,557.47 | 666,726.54 |
| காசும், காசுக்கு சமமானவையும் | 13 | 5,250,317.18 | 3,387,629.91 |
| | | **15,614,030.22** | **26,066,343.59** |
| ***மொத்த சொத்துக்கள்*** | | **116,280,201.90** | **145,586,149.44** |
| ***பொறுப்புக்கள்*** | | | |
| ***நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்*** | | | |
| பணிக்கொடை ஒதுக்கம் | | 44,749,353.50 | 35,394,403.00 |
| கருத்திட்ட கணக்குளின் மிகை அல்லது (குறை) | 14-A | 2,720,160.33 | 1,601,668.55 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் | 14-B | 584,997.27 | (321,549.73) |
| | | **48,054,511.10** | **36,674,521.82** |

| | | | |
|---|---|---|---|
| ***நடைமுறைப் பொறுப்புக்கள்*** | | | |
| நின்ற கணக்குகள் | 15 | 5,876,289.91 | 18,672,035.08 |
| குறுங்கால ஏற்பாடுகள் | 16 | 916,094.14 | 1,782,034.14 |
| | | **6,792,384.05** | **20,454,069.22** |
| ***மொத்த பொறுப்புக்கள்*** | | **54,846,895.15** | **57,128,591.04** |
| ***தேறிய சொத்துக்கள்*** | | **61,433,306.75** | **88,457,558.40** |
| ***நிதியீட்டல்*** | | | |
| மூலதனக் கொடைகள் | 17 | 40,929,636.38 | 61,247,752.69 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 1,941,600.05 | 1,930,000.00 |
| தடுத்துவைக்கப்பட்ட உழைப்புக்கள் | | 18,562,070.32 | 25,279,805.71 |
| | | **61,433,306.75** | **88,457,558.40** |

---

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

## 2019.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசோட்டக் கூற்று

**ரூபா**

| விபரம் | குறிப்பு | **2019** | **2018** |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம்** | | | |
| பொதுவான செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மிகை/(குறை) | | 2,900,086.75 | (7,438,888.09) |
| **முன்னைய ஆண்டுக்கான சீராக்கல்** | | | |
| பணிக்கொடை ஒதுக்கம் | | - | 17,779,419.00 |
| மூலதனக் கொடை - குத்தகை காணி | | - | 17,096,573.27 |
| தடுத்துவைக்கப்பட்ட உழைப்பு | | (9,617,822.14) | (39,195,626.39) |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிதியம் | | 906,547.00 | |
| **காசல்லாத மாற்றங்கள்** | | | |
| தேய்மானம் | 8 | 21,123,948.16 | 21,432,928.78 |
| குத்தகை காணி தேய்மானம் | | 779,041.10 | 779,041.10 |
| தேய்வடைந்த சுனாமிக் கொடை | | - | - |
| தேய்வடைந்த மூலதனக் கொடை | | (20,683,630.31) | (21,246,969.88) |

| | | | |
|---|---|---|---|
| தேய்வடைந்த கருத்திட்ட நிதி | | 1,118,491.78 | 9,555.12 |
| தேய்வடைந்த மூலதன ஒதுக்கம் | | - | - |
| தேய்வடைந்த மீள்மதிப்பீட்டு சேர்மம் | | 11,600.05 | (965,000.00) |
| மூலதனக் கொடை - உபகரணம் | | - | - |
| தடுத்துவைத்த உழைப்புக்களின் அதிகரிப்பு / குறைவு | | - | - |
| செலுத்த வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு | | (12,795,745.17) | 7,427,925.10 |
| குறுங்கால ஒதுக்கங்களின் அதிகரிப்பு | | (865,940.00) | 740,184.00 |
| இருப்பு (அதிகரிப்பு / குறைவு) | | 123,406.71 | (27,582.96) |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் (அதிகரிப்பு / குறைவு) | | 12,164,424.86 | 3,081,518.08 |
| முன்செலுத்தல்கள் (அதிகரிப்பு / குறைவு) | | 27,169.07 | (59,164.54) |
| பணிக்கொடைப் பங்களிப்பு | | 10,067,119.50 | 6,137,143.00 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான தேறிய காசோட்டம்** | | **5,258,697.36** | **5,551,055.59** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்** | | | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | | (2,751,473.00) | (4,358,002.89) |
| நிலையான சொத்து அகற்றல் | | - | 7,527.96 |
| காணி குத்தகைக்குப் பெறல் | | - | - |
| செய்யப்படாத வேலைகள் வவுனியா கட்டிடத்தை ஒழுங்குபடுத்தல் | | (956,315.41) | (3,026,148.14) |
| நீண்டகால கிடைக்க வேண்டிய கணக்குகள் (அதிகரிப்பு / குறைவு) | | 369,896.11 | 519,736.63 |
| முதலீட்டுப் பயன்கள் | | 288,537.21 | 57,722.00 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | | **(3,049,355.09)** | **(6,799,164.44)** |

| | | | |
|---|---|---|---|
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்** | | | |
| பணிக்கொடை செலுத்தல் | | (712,169.00) | (372,404.00) |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதி (அதிகரிப்பு / குறைவு) | | - | - |
| மூலதனக் கொடை பெறுகை | | 365,514.00 | 751,412.77 |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | | **(346,655.00)** | **379,008.77** |
| காசும், காசுக்குச் சமமானவைகளினதும் தேறிய குறைவு | | **1,862,687.27** | **(869,100.08)** |
| ஆரம்ப காசும் காசுக்குச் சமமானவைகளும் | | **3,387,629.91** | **4,256,729.99** |
| **ஆண்டின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவையும்** | **13** | **5,250,317.18** | **3,387,629.91** |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
## 2019.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான உரிமைமாற்றம் பற்றிய கூற்று

(ரூபா)

| | மூலதனக் கொடை | மீள்மதிப்பீட்டுச் சேர்மம் | தடுத்து வைக்கப்பட்ட உழைப்புக்கள் | மொத்த உரிமையாண்மை |
|---|---|---|---|---|
| **2018 சனவரி 01 ஆம் திகதிக்கு சீராக்கல் செய்த மீதி** | **81,743,309.80** | **2,895,000.00** | **32,719,693.80** | **117,358,003.60** |
| **விரிவான வருமானம்** | | | | |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | (7,439,888.09) | (7,439,888.09) |
| ஏனைய மொத்த விரிவான வருமானம் அல்லது செலவினம் | (20,495,557.11) | (965,000.00) | - | (21,460,557.11) |
| **2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி** | **61,247,752.69** | **1,930,000.00** | **25,279,805.71** | **88,457,558.40** |
| முன்னைய ஆண்டின் தவறுகளை சீராக்கல் செய்தல் | - | - | (9,617,822.14) | (9,617,822.14) |
| **2019 சனவரி 01 ஆம் திகதிக்கு சீராக்கல் செய்த மீதி** | **61,247,752.69** | **1,930,000.00** | **15,661,983.57** | **78,839,736.26** |
| **விரிவான வருமானம்** | | | | |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | 2,900,086.75 | 2,900,086.75 |
| ஏனைய மொத்த விரிவான வருமானம் அல்லது செலவினம் | (20,318,116.31) | 11,600.05 | - | (20,306,516.26) |
| **2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி** | **40,929,636.38** | **1,941,600.05** | **18,562,070.32** | **61,433,306.75** |

## தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. வீரீவை /சீ/என்சீபீஏ/2019/01/14 திகதி : 2020 ஆகஸ்ட் 17

திகதி

தலைவர்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டரீதியான, ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பிலான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பளியுள்ள அபிப்பிராயம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றுகைக்கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கள் பற்றிய குறிப்புக்கள் பொழிப்புரையான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்திற்கு அமைய எனது பணிப்பின் பேரில் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு அமைய எனது அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பளியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகவுள்ள பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியன இலங்கை அரசதுறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய உண்மையாக மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பளியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 ஆம் பந்திக்கு அமைய தேவைப்படுத்தப்படும் அல்லது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்படக் கூடாதெனினும், கணக்குப் பதிவுத் தவறுகள் காரணமாக நீண்டகாலமாக காணப்பட்டு வருகின்ற கருத்திட்ட நிதியங்கள் மூன்றின் கூட்டுத்தொகை ரூபா 602,509 ஆன வரவு மீதி மற்றும் ஆறு நிதியங்களின் கூட்டுத்தொகையான ரூ. 3,258,669 ஆன செலவு மீதி

தீர்க்கப்படாது ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு ரூபா 2,720,160 ஆன தேறிய செலவு மீதி நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்திக்கு அமைய நடைமுறையல்லாத சொத்துக்களின் விளைதிறன்மிக்க ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை காரணமாக செலவினம் ரூ. 11,192,030 ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டுள்ள போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அதற்கமைய மதிப்பீட்டு தவறை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இற்கு அமைய திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வு ஆண்டு தொடர்பில் செலுத்த வேண்டிய கூட்டுத்தொகைரூ. 1,502,528 ஆன பணிக்கொடை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 80(ஈ) பந்திக்கு அமைய நடைமுறைப் பொறுப்பாக வெளிப்படுத்தப்பட வேண்டுமாயினும் நடைமுறையல்லாத பொறுப்புக்களாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபையின் முன்புறமாக காணப்பட்ட பழைய எல்லை மதிலுக்குப் பதிலாக புதிய எல்லை மதிலை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூ. 3,635,654 ஆன செலவினம் மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக மிகைக்கட்டணச் செலவினமாக வருமானத்திலிருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், இதற்காக மேலும் செலுத்த வேண்டியிருந்த ரூ. 1,741,535 ஆன தொகை பொறுப்பொன்றாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் பழைய எல்லை மதிலின் பெறுமதி இனங்காணப்பட்டு பதிவேடுகளிலிருந்து பதிவழிப்புச் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வு ஆண்டின் நிதி நிலைமைக் கூற்றில் நடமாடும் சொத்துக்களின் கீழ் இடர் கடன் மீள அறவீடாக ரூ. 470,734 குறிப்பிடப்பட்டிருந்ததுடன், மேற்படி பெறுமதி 5 வருடங்களுக்கும் மேலாகக் காணப்பட்டு வருவதுடன், மேற்படி மீதியை உறுதி செய்துகொள்வதற்கான தகவல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவம் மற்றும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகத் தயார் செய்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு முடியுமானதாகும் வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது, அதிகாரசபையினை தொடர்ச்சியாக பேணிவருவதற்கான ஆற்றலைத் தீர்மானம் செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதுடன், முகாமைத்துவம் அதிகாரசபையை முடிவுறுத்த எதிர்பார்க்குமாயின் அல்லது வேறு மாற்று வழிமுறைகள் இல்லாத பட்சத்தில் செயற்பாட்டை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாயின் அன்றி தொடர்ச்சியான நிலைத்திருத்தலின் அடிப்படையில் கணக்குக் பதிவு மற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் தொடர்பில் ஏற்புடையதான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பை, கட்டுப்படுத்தும் தரப்பினர் கொண்டிருப்பார்கள்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவுக்கு அமைய, நிறுவனத்தின் வருடாந்த மற்றும் கால அடிப்படையிலான நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யக்கூடியவாறு தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் முறையாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணிவருதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடா்பில் கட்டுப்படுத்தும் தரப்பினா்கள் அறிவுறுத்தப்பட்டாா்கள்.

## 2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடா்பிலான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கையில் முனைப்பளியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன், எனது பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளவாறு முறையான நிதி அறிக்கைகளை அதிகாரசபை பேணிவந்துள்ளது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபை சமா்ப்பித்துள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைகின்றன.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (IV) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கடந்த ஆண்டு நான் மேற்கொண்ட சிபாரிசுகள், சமா்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்குகின்றன.

பின்பற்றப்பட்ட நடவடிக்கைமுறை மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் போதியளவிலான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்படுவதன் அடிப்படையில், பின்வரும் கூற்றுக்களை வெளியிடுமளவுக்கு எதனையும் நான் அவதானிப்புச் செய்யவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபையின் நிருவாக சபையின் யாராயினும் உறுப்பினா் ஒருவருக்கு அதிகாரசபை சம்பந்தப்பட்ட ஏதேனும்

உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு வகையில் சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பாக தொடர்பு உள்ளமை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்கள் தவிர நிறுவனத்தின் தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பணிகளுக்கு ஏற்புடையதாகாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது.

| **தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பணிகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| 1998 இன் 58 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14(அ) பிரிவுக்கு அமைய சிறுவர் துர்நடத்தைகள் மற்றும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளான சிறுவர்களைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது பற்றிய தேசியக் கொள்கையை தயார் செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல். | அதிகாரசபை தாபிக்கப்பட்டு 20 வருடங்கள் கடந்துள்ள போதிலும், கொள்கை தயார் செய்யப்பட்டிருக்காமை காரணமாக பல்வேறு வகையிலான துர்நடத்தைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் மற்றும் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு பிள்ளைகள் ஆளாவது அதிகரித்திருந்தது. |

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பு தவிர அதிகாரசபையின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கவாறும், விளைதிறன்மிக்கவாறும் உரிய காலப்பகுதிகளுக்குள் குறித்த சட்டங்கள் விதிகளுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்தியிருக்கவில்லை என்பது.

  2016 ஆம் ஆண்டு ரூ. 18,317,757 பெறுமதிக்கு குத்தகைக் கொள்வனவு அடிப்படையில் பெற்றுக் கொண்ட காணி 2019 மே மாதம் 09 ஆம் திகதி வரை பயன்படுத்தப்படாதிருந்தது.

**ஒப்பம் / டபிள்யு.பீ.சி. விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

ජාතික ළමා ආරක්ෂක අධිකාරිය

අංක 330, තලවතුගොඩ පාර, මාදිවෙල, ශ්‍රී ජයවර්ධනපුර, ශ්‍රී ලංකාව.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

இல.330, தலவதுகொட வீதி, மாதிவெல, ஸ்ரீ ஜயவர்தனபுர, இலங்கை.

**National Child Protection Authority**

No. 330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawardenapura, Sri Lanka.

| | | |
|---|---|---|
| දුරකථන / தொலைபேசி இல / Telephone | : | 011 2778911 -12-14 |
| ෆැක්ස් / தொலைநகல் / Fax | : | 011 2778915 |
| විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / Email | : | chairman@childprotection.gov.lk |
| වෙබ් අඩවිය / இணையத்தளம் / Web | : | www.childprotection.gov.lk |